# பதவிகள் - வெற்றிடம்

*மறுசீரமைப்பு*

**கல்வி அமைச்சு**

*நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 2-II ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளல் - 2018*

*2018.05.25 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2073 ஆம் இலக்க வர்த்தமானியின் 5-681/2 ஆம் அறிவித்தலில் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி 2018.07.16 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு,

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்த,
பத்தரமுல்ல,
2018, யூன் 19.

6-1149/1

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

*மறுசீரமைப்பு*

**கல்வி அமைச்சு**

*நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018*

*2018.05.25 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2073 ஆம் இலக்க வர்த்தமானியின் 5-681/1 ஆம் அறிவித்தலில் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி 2018.07.16 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு,

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்த,
பத்தரமுல்ல,
2018, யூன் 19.

6-1149/2

---

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2012 (II) (2018)**

1.0 அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை 2018 செத்தெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

